# பத்திரிகை செய்தி

தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் நடத்தும் ஆதரவற்ற இல்லங்கள் இளைஞர் பாதுகாப்பு மற்றும் பராமரிப்புச் சட்டம் 2000 மற்றும் திருத்தப்பட்ட சட்டம் 2006-ன் கீழ் பதிவு செய்ய கீழ்க்கண்ட விதிமுறைகளை கடைபிடிக்க வேண்டும் என மாவட்ட ஆட்சியர் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்கள். பதிவு செய்யாமலும் விதிமுறைகளை கடைபிடிக்காத தனனார்வ தொண்டு நிறுவனங்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்துள்ளர்கள்

கன்னியாகுமரி மாவட்டத்தில் 130 ஆதரவற்ற சிறார் இல்லங்கள் கணக்கெடுக்கப்பட்டு ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. 24 இல்லங்கள் 3 வருட பதிவு பெற்றுளளன. 91 இல்லங்கள் நிபந்தனை பதிவு மட்டும் பெற்றுள்ளது. 7 இல்லங்கள் முறைகேடுகளுக்காக ஏற்கனவே மூடப்பட்டுள்ளது. அனைத்து தன்னார்வ தொண்டு நிறுவனங்களும் J.J.Act 2006-ல்; விதிமுறைகளை கடைபிடிக்க கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். விதிமுறைகள் பின்வருமாறு .

குழந்தைகள் இல்லம் அங்கீகாரம் பெற குறைந்த பட்சம் 10 குழந்தைகள் இல்லத்தில் இருக்க வேண்டும்.

<u>1. பதிவு.</u>

தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் சொசைட்டி பதிவு சட்டத்தின்படி.ஃ. டிரஸ்ட் சட்டப்படி பதிவு செய்யப்பட்டு நிர்வாக குழு உறுப்பினர்கள் பெயர்களுடன் அவர்களுக்குரிய அதிகாரங்கள் கடமைகள், பொறுப்புக்கள் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும.

<u>2. முன் அனுபவம்:-</u>

குழந்தைகள் நலனில் தொண்டு ஆற்றுவதில் குறைந்த பட்சம் 3 வருட முன் அனுபவம் உடையவராக இருத்தல் வேண்டும்.

3. குழந்தைகள் காப்பகம் செயல்படும் கட்டிடத்தில் கீழ்கண்ட பதிவுகள் இருக்க வேண்டும். 50 குழந்தைகள் பராமரிக்கப்பட்டால் கீழ் கண்ட வசதிகள் இல்லத்தில் செய்து தரப்பட வேண்டும்.

| வ. எண் | தங்கும் இடம் | எண்ணிக்கை | அளவு |
|---|---|---|---|
| 1 | வசிக்கும் அறைகள் | 2 | 1500 சதுர அடி |
| 2 | சமையலறை | 2 | 250 சதுர அடி |
| 3 | உணவு பொருள் இருப்பு அறை | 1 | 250 சதுர அடி |
| 4 | உணவு அருந்தும் அறை | 1 | 800 சதுர அடி |
| 5 | நூலகம் | 1 | 500 சதுர அடி |
| 6 | குளியலறை | 5 | 125 சதுர அடி |
| 7 | கழப்பறை | 6 | 150 சதுர அடி |
| 8 | ஆலோசனை அறை | 1 | 120 சதுர அடி |
| 9 | நோயாளி<br>குழந்தைகள் பராமரிப்பு அறை | 1 | 750 சதுர அடி |
| 10 | பொழுது போக்கு சாதனங்கள் உள்ள அறை | 1 | 300 சதுர அடி |

.

**4. பணியாளர்கள்:-**

14 வயதுக்குட்பட்ட குழந்தைகள் எனில் தலா ஒரு குழந்தைக்கு 30 சதுர அடி . 15 வயதுக்குட்பட்ட குழந்தைகள் எனில் தலா ஒரு குழந்தைக்கு 40 சதுர அடி. இதனுடன் ஒரு விளையாட்டு மைதானம் இருக்க வேண்டும். 5 வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளை கவனிக்க தலா 25 குழந்தைகளுக்கு 1 பணியாளர் நியமிக்கப்பட வேண்டும். இல்லத்தில் சத்துணவாளர் ஆலோசனைப்படி உணவு அட்டவணை தயாரிக்கப்பட்டு சரிவிகித உணவு அளிக்கப்பட வேண்டும். விழா நாட்களிலும் விடுமுறை நாட்களிலும் சிறப்பு உணவு இல்லக் குழந்தைகளுக்கு அளிக்கப்பட வேண்டும்.

உடல் நலம் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு மருத்துவரின் ஆலோசனையுடன் உணவு வழங்கப்பட வேண்டும்.

**5. மருத்துவ வசதி:-**

முதல் உதவி அளிக்கக் கூடிய வசதிகள் இருக்க வேண்டும். மாதம் ஒருமுறை மருத்துவர் குழந்தைகளை பரிசோதிதது மருத்துவ வசதியோடு பராமரிக்க வேண்டும்.

குழந்தைகளுக்கு அவசர சிகிட்சை (முதலுதவி) அளிக்க செவிலியர் பணியமர்த்திட வேண்டும். அல்லது இல்லம் அருகில் மருத்துவமனை வசதி இருக்க வேண்டும்.

**6. நிதிநிலை:-**

தன்னார்வ தொண்டு நிறுவனம் பொருளாதார தன்னிறைவு பெற்றிருக்க வேண்டும். வங்கி இருந்தால் குறைந்த பட்சம் தொண்டு நிறுவன இல்லத்திற்கு ஆகும் இருமாத தொகை முன்னிருப்பு தொகையாக கணக்கில் இருக்க வேண்டும்.

பட்டய கணக்கரால் இல்லத்தின் வரவு செலவு கணக்குகள் முறையாக தணிக்கை செய்யப்பட்டு பராமரிக்கப்பட வேண்டும். வெளி நாடுகளிலிருந்து பெறப்படும் நன்கொடை, மத்திய மாநில அரசு மான்யம் பொது மக்களிடமிருந்து பெறப்படும் நன்கொடை தொகைக்கு முறையான கணக்கு பராமரிக்கப்பட வேண்டும்.

**7. நூலகம்:-**

இல்லத்தில் பராமரிக்கும் நூலகங்களில் குறைந்த பட்சம் 200 புத்தகங்கள் இருக்க வேண்டும்.

**8. கல்வி:-**

இல்ல குழந்தைகளுக்கு முறையான பள்ளி கல்வி அளிக்க வேண்டும். இதர கலைகளிலும் பயிற்சி அளிக்க இல்லத்தில் வசதி இருக்க வேண்டும்.

**9. தொழில் பயிற்சி:-**

14 வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு தேவைப்படில் தொழில் கல்வி அளிக்க வேண்டும்.

**10. குழந்தை நேய ஆலோசகர்:-**

30 முதல் 40 குழந்தைகளுக்கு ஒரு ஆலோசகர்/வழிகாட்டி நியமிக்கப்பட்டிருக்க வேண்டும்.

**11. பதிவேடுகள்:-**

சேர்க்கை பதிவேடு, வருகை பதிவேடு, மத்திய.்.மாநில அரசு மான்யம் வெளிநாடு நன்கொடை தொடர்பான பதிவேடு, ரொக்க பதிவேடு, ரசீதுகள் உணவு பொருள் இருப்பு மற்றும் வழங்கல் பதிவேடு, நன்கொடை பதிவேடு இல்ல குழந்தைகளுக்கு அளிக்கப்படும் உடைகள், மற்றும் இதர வசதிகளான படுக்கை போன்றவை அடங்கும் பதிவேடுகள் பராமரிக்கப்பட்டு ஆய்வு அலுவலர்கள் பார்வையிடும்போது காண்பிக்கப்பட வேண்டும்.

**12. உச்சவரம்பு:-**

தன்னார்வ தொண்டு நிறுவனத்தின் வருட வரவு செலவு ரூ.10 லட்சம் இருப்பின் 50 குழந்தைகளை பராமரிக்கலாம்.

10 லட்சத்திலிருந்து 20 லட்சம் வரை வரவு செலவு நிதிநிலை இருப்பின் 100 குழந்தைகள் வரை பராமரிக்கலாம்.

<u>வெளிநாட்டு நிதி</u> மூலம் நடத்தப்படும் இல்லங்களுக்கு உரிய FCRA சான்று மற்றும் நிதி ஆதாரம், நிதிக்குரிய முறையான தணிக்கை செய்யப்பட்ட விபரம் மற்றும் தடையின்மை சான்று வருமான வரி துறையினரால் அளிக்கப்பட்டிருக்க வேண்டும்.

மேற்கண்ட விதிமுறைகள அனைத்து தொண்டு நிறுவனங்களும் கடைபிடிக்க வேண்டும். அனைத்து குழந்தைகள் காப்பகங்களிலும் பராமரிக்கப்படும் குழந்தைகள்,

குழந்தைகள் நல குழுமம் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டு தகுதிச்சான்று பெறப்படவேண்டும்.

சமூகநல இயக்ககம் சென்னை தலைமை அலுவலகத்தில் எதிர்பாராத தீ விபத்தினால் அனைத்து ஆவணங்களும் சேதமடைந்த காரணத்தினால் 3 வருட பதிவு உரிமம் பெற்ற தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் அனைத்து ஆவணங்களுடன் சமூகநல பதிவு சான்றுடன் 1 நகல் அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும்.

இளைஞர் நீதிச்சட்டத்தின்கீழ் 6 மாத தற்காலிக பதிவு பெற்ற தொண்டு நிறுவனங்களின் நிபந்தனை பதிவு முடிவுற்ற நிலையில் 3 வருட பதிவு பெறும் பொருட்டு ஜனவரி 2012 மாத இறுதிக்குள் விண்ணப்பத்திருக்க வேண்டும். விண்ணப்பிக்க தவறிய தொண்டு நிறுவனங்களின் முகவரி மாவட்ட இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. (**www.kanyakumari.tn.nic.in)** மேற்கண்ட குழந்தை காப்பகங்கள் நடப்பாண்டில் பெறப்பட்ட சான்றுகளுடன் மாவட்ட சமூகநல அலுவலகத்திற்கு 2 வார காலத்திற்குள் விண்ணப்பங்களை அனுப்ப வேண்டும். தவறும் பட்சத்தில் காப்பகங்களை மூட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். 3 வருட பதிவு உரிமம் பெறுவதற்கு கீழ்கண்ட இணைப்புகளுடன் 2 நகல்களில் மாவட்ட சமூகநல அலுவலகம், 30பி ஆலன் தெரு, ஈகிள் கேட், கோர்ட் ரோடு, நாகர்கோவில் என்ற முகவரியில் செயல்படும் அலுவலகத்தில் விண்ணப்பிக்க கேட்டுக் கொள்ளப்படுகிறது.

<u>**இணைக்கப்படவேண்டிய சான்றுகள்**</u>

1. விண்ணப்ப படிவம்
2. சொசைட்டி பதிவு / டிரஸ்ட் பதிவு நகல
3. நிர்வாக குழு விபரம்
4. பணியாளர்கள் விபரம்
5. குழந்தைகள் விபரம்
6. கட்டிட உறுதி தன்மை – பொதுப்பணித்துறை / பட்டய பொறியாளர்
7. கட்டிட உரிமம் - வட்டாட்சியர் சான்று
8. சுகாதார சான்று – துணை இயக்குநர் (சுகாதாரம்)
9. தீயணைப்பு தடைச்சான்று – கோட்ட தீயணைப்பு நிலையம்
10. வெளிமாநில குழந்தைகள் சேர்க்கப்படவில்லை என்ற சான்று - தன்னார்வ தொண்டு நிறுவனம் மூலம் வழங்கப்பட வேண்டும்.
11. கடைசி மூன்று வருட தணிக்கை அறிக்கை
12. FCRA / வெளிநாட்டு நன்கொடை பெறுதல் அங்கீகாரச்சான்று
13. 12 AA – வருமான வரி விலக்களிப்பிற்கான சான்று

மாவட்ட ஆட்சித்தலைவர்
கன்னியாகுமரி மாவட்டம